


# இதுவல்லவா
# உன்
# வாழ்க்கை!


## கிறிஸ்தவ
## கைப்பிரதி


ஆ! ஆ!?
"தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே! உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப் படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்."
லூக்கா 12 : 20


"ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது."
எபிரெயர் 9 : 27


அவன் ஒரு நல்ல மனிதனாக இருந்தானே
"நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள் போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போல இருக்கிறது, நாங்கள் அனைவரும் இலைகளைப் போல் உதிருகிறோம்; எங்கள் அக்கிரமங்கள் காற்றைப் போல் எங்களை அடித்துக்கொண்டு போகிறது."
ஏசாயா 64 : 6


"இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்." யோவான் 5 : 28
எழும்பு!


பொறுங்கள என்ன நடக்கிறது ? நான் மரித்து விட்டேனே ! எல்லாம் முடிந்து விட்டதே !!
"அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்." யோவான் 5 : 29


நியாயத்தீர்ப்பா? பூலோக வாழ்வு தான் பரலோகமும் நரகமும் என்று நான் சொல்லிக் கொண்டிருந்தேனல்லவா ?
என்னோடே வா! நீ சந்திக்க வேண்டியவர் ஒருவர் இருக்கிறார்



வேறு யாரேனும் அங்கு உண்டா ?
ஏன் ! திரள் கூட்டமே அங்கு உண்டு !!









"அந்தபடியே, நீதிமான் ஒருவனாகிலும் இல்லை என்று எழுதியிருக்கிறதே." ரோமர் 3 : 10



"மரித்தோராகிய சிறியோரையும், பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்; அப்பொழுது புத்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுத்தகம் என்னும் வேறொரு புத்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புத்தகங்களில் எழுதப் பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத் தீர்ப்படைந்தார்கள்." வெளி 20 : 12






" வெளியரங்கமாகாத அந்தரங்கமுமில்லை,
வெளிக்கு வராத மறை பொருளுமில்லை." மாற்கு 4 : 22




"மனிதர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும்." மத்தேயு 12 : 36





"ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும், தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று."
மத்தேயு 5 : 28




"வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை; அறியப்படாத இரகசியமும் இல்லை."

மத்தேயு 10 : 26




இயேசு கூறுகிறார்:
"நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்." யோவான் 14 : 6
எனக்கு கிறிஸ்து அவசியமில்லை நான் நல்லவன்தான்! நான் என் வழியிலேயே செல்லுவேன்!!
ஐயோ ! நான் ஒரு பைத்தியக்காரனைப் போலல்லவா நடந்து கொண்டேன்



நான் என்ன சொல்லுவேன் ? நான் தொலைந்தேன் . . . இனி நம்பிக்கை இல்லை ! ஐயோ ! கிறிஸ்து இல்லாத வாழ்க்கை— நான் குற்றமுள்ளவன் . . . நான் பாவி !
"மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்."
கலாத்தியர் 6 . 7


ஜீவ புத்தகத்தைத் திறவுங்கள்!


ஆண்டவரே ! இவன் பெயர் இதில் இல்லை




* மத்தேயு 25 : 41



"அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்."
மத்தேயு 25 : 46




"ஜீவ புத்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ
அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்." வெளி 20 : 15

# இனி உன் வாழ்க்கை இவ்வாறு அமையட்டுமே!

"தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி,
கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்,
ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி,
நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்."

*2 பேதுரு 3 : 9*




"ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்." யோவான் 3 : 3





"வழக்காடுவோம் வாருங்கள் — என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும், உறைந்த மழையைப் போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும்." ஏசாயா 1 : 18




"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்."
பிலிப்பியர் 1 : 21




"கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது." சங்கீதம் 116 : 15




"எழுதியிருக்கிறபடி, தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்திலே தோன்றவுமில்லை." 1 கொரிந்தியர் 2 : 9